# கிழக்கு மாகாண கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் -2012

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட ஜென் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 2,298,082,525 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,598,046,599 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| கூறுகள் | 2012 ஆம் ஆண்டிற்கான செலவினம் | 2010 மாரச் 26 முதல் 2011 திசெம்பர் 31 வரைக்குமான முதலாவது கணக்காண்டுக்கான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 1,994,709,433 | 1,096,165,517 | 3,090,874,950 |
| உபகரணங்கள் | - | 8,834,466 | 8,834,466 |
| ஆலோசனை சேவைகள் | 22,947,386 | 28,940,103 | 51,887,489 |
| நிர்வாகக் கிரயம் | 52,542,712 | 58,850,850 | 111,393,562 |
| வரி | 207,768,153 | 98,258,286 | 306,026,439 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | 3,824,825 | 5,844,324 | 9,669,149 |
| வட்டிக் கட்டணங்கள் | 16,290,016 | 3,070,528 | 19,360,544 |
| மொத்தம் | 2,298,082,525 | 1,299,964,074 | 3,598,046,599 |

### 2.2 விசேட ஜென் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான விசேட ஜென் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அக் கணக்கில் இருந்த மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | 2012 | |
|---|---|---|
| **விபரங்கள்** | **ஜப்பான் ஜென்** | **ரூபா** |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 460,868,373 | 676,047,816 |
| கூட்டு: மீளளிப்புகள் | 1,204,964,213 | 1,884,787,614 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 50,872,648 |
| | 1,665,832,586 | 2,611,708,078 |
| கழி:- பற்றுதல்கள் | (1,274,053,475) | (2,031,914,172) |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 391,779,111 | 579,793,906 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பின்வரும் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டியவைகள் நிதிக் கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

| விடயங்கள் | தொகை ரூபா |
|---|---|
| செலுத்த வேண்டிய பிடி காசு | 31,876,612 |
| பெறவேண்டிய தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் | 214,426,927 |
| 2012 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான சிவில் வேலைகளிற்காக செலுத்தவேண்டியவைகள் | 1,202,268 |
| | 247,505,807 |

(ஆ) 2011 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா 2,261,027 தொகையான ஆலோசனைக் கொடுப்பனவு 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா 4,973,820 தொகையான செலுத்த வேண்டிய ஆலோசனைக் கொடுப்பனவுகள் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 230,930 தொகையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு சொத்துக்களாக கணக்குவைப்பதற்குப் பதிலாக நிர்வாகக் கிரயமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

## 3.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

ரூபா 9,065,396 தொகையான நிலையான சொத்துக்களிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் நடாத்தப்பட வேண்டிய கணிப்புச் சபை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

பண அளிப்புப் பட்டியலின்படி, 2010 முதல் 2013 வரையான மூன்று ஆண்டுகள் மற்றும் மூன்று நபர்களிற்கிடையில் ஜென் 4,664 மில்லியன் (ரூபா 5,834 மில்லியன்) தொகையான மொத்த நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஒதுக்கீட்டின் படி, 2012 ஆம் ஆண்டிற்காக திறைசேரி ஏற்பாடு ரூபா 2,473,750,000 ஆனதுடன் அவற்றில் ரூபா 2,298,080,000 அல்லது ஆரம்ப பண அளிப்புத்திட்டத்தின் 93 சதவீதம் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. நிதிகள் பயன்படுத்தலின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் பயன்படுத்திய தொகை | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு வரை திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ஜென் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| ஜேஐசீஏ | 3,965 | 4,944 | 2,144 | 2,038 | 3,172 |
| இலங்கை அரசாங்கம் | 699 | 890 | 330 | 260 | 426 |
| | 4,664 | 5,834 | 2,474 | 2,298 | 3,598 |

நிர்மாண காலம் 83 சதவீதம் கடந்திருந்த போதிலும் பயன்பாட்டிற்காக இருந்த நிதிகள் மொத்தக் கடன் தொகையின் 38 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,236 மில்லியனாக உள்ளது. ஆகையால் இருக்கும் செயற்திட்ட காலத்திற்குள் மீதி நிதிகளைப் பயன்படுத்த முடியுமா என்பது ஐயத்திற்கிடமாகவுள்ளது.

## 4.2 பௌதீக செயலாற்றல்

நிர்மாண வேலைகள் 2013 யூலை 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் நிர்மாண வேலைகள் 2013 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் திருப்திகரமான மட்டம் வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட முன்னேற்ற அறிக்கை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிழக்கு மாகாணத்தில் 333 கிமீ நீளமான வீதிகளை நிர்மாணிப்பதற்கு 307 உப செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், உப செயற்திட்டத்தின் குறித்த காலத்திற்குள் உப செயற்திட்டங்கள் எதுவும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. சகல உப செயற்திட்டங்களிற்காகவும் இரண்டு மாதங்கள் முதல் பத்து மாதங்கள் வரை நீடிக்கப்பட்ட காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் நான்கு உப செயற்திட்டங்களிற்கு 08 மாதங்களிற்கு மேலாக இரண்டாவது தடவை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தகாரர்களின் கவனயீனம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கப்பட்ட இரண்டு ஒப்பந்தங்கள் தாமதப்பட்டிருந்தன. ஒப்பந்த காலம் காலவாதியாகயிருந்தது. ஒப்பந்த காலம் முடிவடைந்து விட்ட போதிலும் ஒப்பந்தங்களின் பௌதீக செயலாற்றல் 22 சதவீதத்தை விட குறைவாக இருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

அ. கணக்கீடு

ஆ. ஒப்பந்த நிர்வாகம்

இ. நிதி முகாமைத்துவம்

ஈ. செயலாற்றல் மீளாய்வும் கண்காணிப்பும்

உ. பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் சான்றுபடுத்தல்